


# அழகும் பேரழகும்! 2

தினந்தோறும் காலை ஆறு மணிக்கு ஃபேஸ்புக்கில் ‘இந்த நாள் இனிய நாள்’ என்ற தலைப்பில் ஒரு செய்தியை ‘அனைவருக்கும் இந்த நாள் இனிய நாளாகட்டும்’ என்ற வாழ்த்துடன் பதிவிட்டு வருகிறேன். இது வானொலியில் தொடர்ச்சியாக வெளிவந்த தென்கச்சி சுவாமிநாதன் அவர்களின் ‘இன்று ஒரு தகவல்’ போல உள்ளது என்ற பாராட்டுடன் பெருத்த வரவேற்பையும் பெற்றுள்ளது. குறிப்பாக தன்னம்பிக்கைப் பெண்கள் குறித்தும், குடும்ப உறவுகள் குறித்தும், எழுதுபவை பெரும் வரவேற்பைப் பெறுகின்றன. இவற்றை எழுதும்போது, அழகு குறித்த கேள்வி எனக்குள் எழுந்தது.

சமீபத்தில் வெளியான ‘ஐரா’ திரைப்படத்தில் நயன்தாரா இரட்டை வேடங்களில் நடித்திருக்கிறார். கிராமத்துப் பெண் பவானியாக அவரின் நடிப்பு கிளாசிக். அவர் கறுப்பாக இருப்பது, அவரின் பிறந்த நாளன்றே அவர் அப்பா இறந்துபோனது, அவர் ருதுவான தினத்தன்று அவர் சகோதரியின் குழந்தை மனவளர்ச்சியின்றி பிறந்தது என அவர் ராசியில்லாத பெண்ணாகவே வளர்கிறார். ஒரு கட்டத்தில் அம்மாவே அவரை வீட்டைவிட்டு விரட்டிவிடுகிறார். பிறகு ஹோட்டலில் வேலைக்குச் சேர்கிறார். அவரை இளம் வயதில் காதலித்த பள்ளித்தோழனை சந்திக்கிறார். திருமணம் செய்துகொள்ள முடிவெடுக்கிறார்கள். அதுவும் நடக்கவில்லை. கடைசிவரை அவரது துரதிர்ஷ்டம் தொடர்கிறது.

இதில் கிராமத்து நயன்தாராவைப் பார்த்தபோது, 15 ஆண்டுகளுக்கு முன் என் அலுவலகத்தில் பணியில் இருந்த ஒரு பெண் நினைவுக்கு வந்தார். எம்.சி.ஏ தொலைதூரக் கல்வியில் படித்துக் கொண்டிருந்த ஒரு பெண்ணை என் பர்சனல் செகரட்டரியாக வேலைக்கு எடுத்திருந்தேன். என்னைவிட ஏழெட்டு வயது சிறியவள். நிறம் மற்றும் உயரம் இரண்டிலுமே நார்மலுக்கும் சற்று குறைவு. பற்களும் தூக்கலாக இருக்கும். தஞ்சை மாவட்டத்தின் ஒரு கிராமத்திலிருந்து வந்தவள்.

அவளின் தைரியம், உள்ளத்தில் உள்ளதை பேசுகின்ற வெளிப்படையான குணம், நேர்மை, உழைப்பு இவை என்னை வெகுவாகக் கவர்ந்தன. அவளுக்கு தன் தோற்றத்தின் மீது எக்கச்சக்க தாழ்வு மனப்பான்மை. நம்பிக்கை வார்த்தைகள் சொல்லி, அவளை ஊக்கப்படுத்தினேன். தன்னம்பிக்கையானாள்.

அவள் பேசும் ஆங்கிலத்தை இன்னும் மெருகேற்ற வகுப்புக்கு ஏற்பாடு செய்தேன். தமிழுக்கு இணையாக ஆங்கிலத்திலும் பேசத் தொடங்கினாள். புரோக்ராமிங் கற்றுக்கொடுத்தேன். சாஃப்ட்வேர் வடிவமைக்கும் அளவுக்குப் புலமை பெற்றாள். இப்படி எல்லா வேலைகளிலும் படு ஸ்மார்ட். காரணம், ‘நீங்கள் கொடுத்த ஊக்கமும் உற்சாகமும்’ என்பாள்.

நான் அலுவலகத்தில் இல்லாத நேரத்தில் அலுவலகம் முழுவதும் அவள் கன்ட்ரோலில் இருக்கும். நான் இருக்கும் நேரங்களில் இயல்பாக சிரித்துப் பேசுபவர்கள்கூட, நான் இல்லாத நேரத்தில் அவள் கண்காணிப்பில் ‘கப்சிப்’தான். அந்த அளவுக்கு ஆளுமை. ‘இதற்கும் நீங்கள்தான் இன்ஸ்பிரேஷன்’ என்பாள்.

தொடர்ந்து ஐந்து வருடங்கள் என் நிறுவனத்தில் பணி புரிந்துவிட்டு, என் அனுமதியுடனேயே பன்னாட்டு நிறுவனம் ஒன்றில் வேலைக்குச் சென்றாள். வெளிநாடுகளுக்கெல்லாம் சென்று திரும்பியிருக்கிறாள். அவ்வப்போது போன் செய்து பேசுகிறாள்.

**வாழ்க்கையின் அப்லோடும் டவுன்லோடும்!**

**■ காம்கேர் கே.புவனேஸ்வரி**

‘அழகு’ என யார் உதாரணம் கேட்டாலும், இன்றளவும் அவள்தான் என் நினைவுக்கு வருகிறாள். தோற்றத்தால் வருவதில்லை அழகு. கடுமையான உழைப்பாலும் நேர்மையான குணத்தாலும் வருவதே பேரழகு.



இதை நிரூபிக்கும் வகையில் சமீபத்தில் மூன்று உழைக்கும் கரங்களை சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது.

ஒரு நாள் ப்ராஜெக்ட் விஷயமாக காலை 8 மணிக்குக் கிளம்பிச் சென்று உச்சி வெயிலில் திரும்ப வேண்டியதாயிற்று. இளநீர் சாப்பிடலாம் என்று காரை ஓரமாக நிறுத்திவிட்டு, மரத்தடி நிழலில் ஒரு தள்ளுவண்டியில் இளநீர் விற்றுக்கொண்டிருந்த பெண்ணிடம் ‘இளநீர் காயாக வேண்டும்’ என்றேன். ‘‘ஒரு இளநீர் 50 ரூபாய்’’ என்று விலையைச் சொன்னபடி அந்தப் பெண் இளநீர் வெட்டத் தயாரானார்.

அதற்குள் என் கண்கள் அந்த தள்ளுவண்டிக்கு அருகில் இருந்த மற்றொரு தள்ளுவண்டியை நோட்டம் விட்டது. அதில் தர்பூசணி விற்றுக்கொண்டிருந்தார் மற்றொரு பெண். இளநீர் விற்கும் பெண்ணைவிட அவர் சற்று மூத்தவராக இருந்தார்.

இதற்குள் இளநீர் வர, அதை பருகிக் கொண்டே அந்தப் பெண்ணிடம் பேச்சுக் கொடுத்தேன். ‘‘அந்த தள்ளுவண்டியும் உங்களுடையதுதானா?’’

‘‘ஆமாம்மா... அது எங்கக்காவோடது!’’

இரண்டு தள்ளுவண்டிகளுக்கு நடுவில் ஒரு பாட்டி உட்கார்ந்து மல்லிகைப்பூ தொடுத்துக்கொண்டிருந்தது என் கண்களில் பட்டது. ‘‘பூவை நன்றாக நெருக்கித் தொடுக்கறாங்களே... விற்பதற்குத்தானா?’’ என்றேன்.

‘‘ஆமாம்மா... ஒரு முழம் 30 ரூபாய்’’ என்று சொன்ன இளநீர்ப் பெண், கூடுதலாய் மற்றொரு தகவலையும் சொன்னார். ‘‘இவங்க என் அம்மா!’’

‘‘ஓ... அப்படியா? இவங்களை ஒரு போட்டோ எடுத்துக்கட்டுமா?’’ என்று அனுமதி கேட்டேன்.

இதைக் கேட்ட பாட்டியம்மா, முகத்தை புடவையால் அழுந்தத் துடைத்துக்கொண்டு போட்டோவுக்கு போஸ் கொடுத்தார். இரண்டு மூன்று க்ளிக்குகளில் போட்டோ செஷனை முடித்துக்கொண்டேன். பாட்டியம்மாவின் முகத்தில் அத்தனை சந்தோஷம்.

அவர்கள் பேசியதும், பழகியதும் அவர்கள் கொடுத்த இளநீரைவிட இனிப்பாக இருந்தது. அவர்களிடம் வாங்கிய மல்லிகையின் மணத்தைவிட வசந்தமாக இருந்தது. வெவ்வேறு வயதில் மூன்று பெண்கள். இளநீர் விற்பனை, தர்பூசணி விற்பனை, பூ விற்பனை என மூன்று வெவ்வேறு வியாபாரங்கள். கையில் தொழில், கண்களில் நம்பிக்கை.

இவர்களிடமிருந்து எனக்குள்ளும் ஒரு புது உற்சாகம் தொற்றிக்கொண்டது.

ஒருமுறை திருச்சியில் நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்டு காரில் சென்னை திரும்பி வந்துகொண்டிருந்தபோது இரவு 8.30 மணிக்கு ஓர் இயற்கை உணவகத்தில் சாப்பிடச் சென்றோம். சாப்பாடும் சர்வீஸும் அருமை.

அதற்கு இணையாக ரெஸ்ட் ரூமும் மிக சுத்தமாக பளிச்சென்றிருந்தது. நேஷனல் ஹைவேயில் இப்படியும் சுத்தமான ரெஸ்ட் ரூம் பராமரிப்புடன் ஓர் உணவு விடுதியா என ஆச்சர்யப்பட்டேன். வெளியில் புன்னகையுடன் யூனிஃபார்ம் அணிந்த ஓர் இளம்பெண் நின்றுகொண்டிருந்தார்.

அவரைப் பாராட்ட நான் வாய் எடுப்பதற்குள், ‘‘பாத்ரூம் எப்படி இருக்கிறது மேடம்? நல்லா சுத்தமா இருக்கா? நல்லா பராமரிக்கிறேனா?’’ என வெள்ளந்தியாகக் கேட்டார். ‘‘சூப்பரா மெயின்டெயின் செய்கிறீர்கள்’’ என்று பாராட்டினேன்.

இரவில் ஹோட்டல் மூடும் நேரத்தில்கூட பாத்ரூம் சுத்தம் செய்யும் பணிப்பெண்ணால் இவ்வளவு மகிழ்ச்சியுடன் வேலை செய்ய முடியுமா என வியந்தேன்.

எந்த வேலை செய்தால் என்ன? ஆத்மார்த்தமாக செய்யும்போது அந்த வேலை நேர்த்தியாகிறது. அழகாகிவிடுகிறது. அதைச் செய்பவர்களும் பேரழகாகிவிடுகிறார்கள். ●

**இந்த மாத அப்லோடும் டவுன்லோடும்!**

நாம் பேரழகாக ஒரு வழி உள்ளது. எந்த வேலையையும் கடமைக்குச் செய்யாமல் மனநிறைவுடன் விரும்பிச் செய்ய வேண்டும். அகத்தில் தோன்றும் புத்துணர்வும், மனநிறைவும் புறத்தோற்றத்தில் பொலிவைக் கூட்டும். நம்மை பேரழகாக்கும்.



**காம்கேர் கே.புவனேஸ்வரி**